1981 மார்ச் 2]

South Arcot I—Cuddalore.
South Arcot II—Villuppuram.
South Arcot III—Kallakurichi.
Thanjavur I—Thanjavur.
Thanjavur II—Thiruvarur.

இப்படி 2 மாவட்டங்கள் அடங்கிய 5 இடங்களாகத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு இடத்திலும் ஒரு டிஸ்ட்டிரிக்ட் ஹெல்த் ஆபீசரைப் போட்டிருக்கிறோம். ஒரு மாவட்டச் சுகாதார அதிகாரி இதுவரை 30 ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேற்பார்வையிட வேண்டியிருந்தது. இப்போது மாற்றியமைக்கப்பட்ட முறைப்படி ஒவ்வொரு மாவட்டச் சுகாதார அதிகாரியும் 17 அல்லது 18 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்க்க வேண்டியிருக்கும். அதாவது மாதத்திற்கு இருமுறை ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பார்வையிடக் கூடிய வாய்ப்பு இனி இருக்கும். இவ்வாறு மாவட்டங்கள் அனைத்திலும் சுகாதாரச் சேவைகள் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் தினக்கூலி ஊழியர்கள்

*109 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கதர்-கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலியாகப் பணிபுரியும் பொதுப் பணித்துறை ஊழியர்களை, பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என, கூவம், பக்கிங்காம் கால்வாய் தேசியத் தொழிலாளர் சங்கம், 1979-ல் நடத்திய போராட்டத்தின் முடிவில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கேற்ப, 31—7—1980 ஆம் நாள் வரை அவ்வூழியர்கள் நிரந்தரமாக்கப்படாததை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) & (இ) தினக்கூலியாக பணிபுரியும் பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது பற்றி அரசு ஆய்வு செய்து 1—4—1975-ந் தேதியன்று பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணியில் உள்ள பணியாட்களின் பணி 1—10—1976 முதல் சம்பள எற்ற முறை மற்றும் இதர பலன்களுடன் மாநில சேவையாக்கப்பட்டு, மாநில சேவையாக்கப்பட்ட வேலை நிதி அமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கு 14—7—1976 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 303 தினக்கூலியாளர்களின் பணிகள் மாநில சேவையாக்கப்பட்டு நிரந்தரப்படுத்த உத்திரவு இடப்

பட்டுள்ளது. இதன் பின்னர் 31—12—1979 முடிய பத்து ஆண்டுகளும் அதற்கு மேலும் பணிபுரிந்த 453 தினக்கூலி ஊழியர்களின் பணிகளை மாநில சேவையாக்கி பணி நிரந்தரம் செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தினக்கூலி ஊழியர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்க பணிக்காலம் 10 ஆண்டு என்றிருப்பதை 5 ஆண்டு என்று குறைக்க அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

(முற்பகல் 10-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 1979-ல் அரசு உறுதிமொழி தந்ததறகிணங்க 31—7—1980 முடிய அந்த ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்பது தான் கேள்வி. அந்த ஊழியர்களை நிரந்தரமாக்க ஆணை பிறப்பித்துள்ள தாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 31—12—1979-க்குப் பின்னே எந்தத் தேதியில் அறிவிக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : 2—5—1980 நாளிட்ட, பொதுப் பணித் துறை ஆணை எண் 911-ல் 1—4—1975 லிருந்து 1—4—1977 வரை 10 ஆண்டுகள் பணி முடித்த 208 தினக்கூலிகள் பணியை மாநிலச் சேவை யாக்கி நிரந்தரப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

2—4—1977 முதல் 31—12—1979 முடிய அதற்குமேல் பணியாற்றியுள்ள 242 தினக்கூலிகள் பணியை மாநிலச் சேவையாக்கி நிரந்தரப்படுத்தும் செயற் குறிப்பின் மீது ஆணைகள் 3—2—1891 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை எண் 140-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு உறுதிமொழி தந்ததை ஆணையாகப் பிறப்பிப்பதில் ஓராண்டுக்கு மேலாக காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரி கிறது. உறுதிமொழிகளை அவ்வப்போது நிறைவேற்றுகிற வகையில் அதிகாரி களைத் தீவிரப்படுத்தி அமைச்சர்கள் அளிக்கக்கூடிய உறுதிமொழிகளை யொட்டி உடனடியாக ஆணைகள் பிறப்பிக்க இந்தத் துறை அமைச்சர் அவர் கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : உறுதிமொழியை அளித்த பின்னர் ஆக்க பூர்வமான வேலைகளை முடக்கிவிட்டு முடிவு பெறுவதற்குச் சிறிது காலதாமதம் ஆகும். துரிதமாக இப்படிப்பட்ட உறுதி மொழிகளைச் செயலாக்க அரசு பரிசீலனை செய்யும்.

TRUTH ALONE TRIUMPHS